# அடுக்குமாடி வீடுகளை பல பகுதிகளாக பிரிப்பது பாதுகாப்பிற்கு ஆபத்து

கோலாலம்பூர், அக். 23-

அடுக்குமாடி வீடுகளை பல பகுதிகளாக பிரிப்பது பாதுகாப்பிற்கு ஆபத்து என்று கூட்டரசுப் பிரதேச கெஅடிலான் கட்சியின் தலைவர் லாய்சென் ஹெங் சுட்டிக்காட்டுகிறார்.

அண்மையில் சிலாங்கூரில் உள்ள ஓர் அடுக்குமாடி வீட்டில் ஏற்பட்ட தீ விபத்து ஓர் இளம் உயிரை பறித்தது. அடுக்குமாடி வீடுகளை பல பகுதிகளாக பிரித்து வாடகைக்கு விட்டதால் இத்தகைய துயர சம்பவம் நேர்ந்துள்ளது.

குடியிருப்பாளர்களின் உயிருக்கு உலை வைப்பது மட்டுமின்றி பொதுவாகவே பொது பாதுகாப்பிற்கு தீங்கு இழைக்கும் ஒன்று. சட்டவிரோத மாக அடுக்குமாடி வீடுகளை பல பகுதிகளாக பிரித்து



வாடகைக்கு விடும் நிலைமை நிலவுவதற்கு காரணம் உண்டு.

மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் வீட்டு விநியோகம் போதிய அளவில் இல்லை.

வாழ்க்கை செலவினம் உயர்ந்திருப்பது மற்றொரு காரணமாகும். சட்டவிரோதமாக சீரமைப்பு செய்த கட்டட பகுதி யால் இத்தகைய தீ விபத்து ஏற்பட காரணமாகி விட்டது. தீ பேரிடரிலிருந்து குடியிருப்பாளர் கள் தப்பிக்க இயலாமல் போய் விட்டது. இதுபோன்ற விபத்து கள் மீண்டும் மீண்டும் ஏற்படு வதை நாம் ஒருபோதும் அனுமதிக்கலாகாது என்று கோலாலம்பூர் மாநகர் மன்ற ஆலோசனை வாரிய உறுப்பின ருமான லாய் சென் ஹெங் எடுத்துரைத்தார். வாடகை வழி அதிக பணத்தை சம்பாதிக்கும் போக்கும் நோக்கும் நிலவுகிறது.

நிதி நெருக்கடிகளை குறைப்பது என்பது இன்னொரு காரணம். கட்டட பகுதிகளை சட்டவிரோதமாக சீரமைப்பு செய்வது 1984 ஆம் ஆண்டு பொதுவான கட்டட நிர்மாணிப்பு சட்டத்தையும் 1976ஆம் ஆண்டு ஊராட்சித் துறை சட்டத்தையும் மீறுவதாக உள்ளது.

அரசாங்கம் சட்ட அமுலாக் கத்தை கடுமையாக்க வேண்டும். குறைந்த வருமான பிரிவினர் வாங்கும் சக்திகளுக்கு உட்பட்ட வீடுகளை கொள்முதல் செய்யும் வண்ணம் மத்திய அரசாங்க மும் மாநில அரசாங்கமும் கூட்டு முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். விழிப்புணர்வு அளவு பெருக வேண்டும் என்றும் லாய் சென் ஹெங் அறை கூவல் விடுத்தார்.